1982 ஏப்ரல் 1] [பேரவைத் தலைவர்]

பேரவையின் 245 (4)-வது விதியின் கீழ் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களை இக்குழுவின் தலைவராக நியமிக்கிறேன்.

ஊ. அவைக் குழு—உறுப்பினர்கள் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் 1982–83 ஆம் ஆண்டிற்கான அவைக் குழுவிற்கு (ஹவுஸ் கமிட்டி) சட்டமன்றப் பேரவையின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு கீழ்க்கண்ட பதின்மூன்று உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப் பட்டார்கள்.

1. திரு. ஏ.டி. கருப்பையா
2. திரு. மு. சுந்தரம்
3. திரு. மு.ப. முனுசாமி
4. திரு. சித. சிதம்பரம்
5. திரு. ஏ. சந்திரசேகரன்
6. திரு. தா. சாமிக்கண்ணு
7. திரு. மா. சுப்பிரமணியன்
8. திரு. க. இரா. சின்னராசு
9. திரு. இரா. திருமான்
10. திரு. சோ. கலிதீர்த்தான்
11. திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன்
12. திரு. ஏ. தங்கராசு
13. திரு. கே. பி. நாச்சிமுத்து

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்கு சமமாக இருப்பதால், 1982–83-ஆம் ஆண்டிற்கான அவைக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப் பெற்றதாக நான் அறிவிக்கிறேன்.

பேரவையின் 288 (1)-வது விதிக்கிணங்க.

1. திரு. ரா. கு. பெருமாள்
2. திரு. எம். அண்ணாதாசன்

[பேரவைத் தலைவர்] [1982 ஏப்ரல் 1

3. திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்

4. திரு. ஏ. சாகுல் ஹமீது.

ஆகியவர்களை இக்குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன்.

பேரவையின் துணைத் தலைவர் அவர்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் தலைவராவார்.

2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஆ) முன்னாள் ஐ.ஜி. கொடுத்த தகவல் குறித்து பேரவையில் கேட்கப்பெற்றதற்கான விளக்கம்.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, இங்கே 4, 5 நாட்களுக்கு முன்னால் நடந்த விவாதத்தில் எதிர்தரப்பிலிருந்து எதிர்க்கட்சியில் இருந்து ஒரு முக்கியமான விஷயத்தைக் கிளப்பி இருந்தார்கள். அதைப் பத்திரிகையில் நான் பார்த்தேன். திரு. ஆர். என். மாணிக்கம், முன்னாள் ஐ.ஜி. அவர்கள் சி.எம்., (C.M.S.) பிரதர் பற்றி எல்லாம் குறிப்பிட்டதாக ஒரு செய்தி எழுப்பப்பட்டு அது பத்திரிகையிலே வந்ததை நான் பார்த்தேன். அது இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அரசாங்கத் தரப்பில் இருந்து அதைப்பற்றி தெளிவு ஒன்றும் இல்லாமல் அப்படியே இருக்கிறது. ஆகவே, அதைப்பற்றி இரண்டில் ஒரு முடிவுக்குத்தான் நாங்கள் வரவேண்டியிருக்கிறது. அதற்கு விளக்கம் இல்லை என்றால், இங்கே அதுபற்றி ரெய்ஸ் பண்ணியிருக்கும்போது, அரசாங்கம் அதை உண்மை என்று கன்குளூட் பண்ண வேண்டும். இல்லை என்றால் அரசாங்கத்தின் தரப்பிலே ஏதாவது அதற்கு விளக்கமோ, மறுப்போ கொடுத்தால் நாங்கள் இரண்டையும் வைத்து சிந்தித்து, எங்களுடைய சொந்த முடிவுக்கு வர முடியும். அதைப்போல மக்களும் ஒரு சொந்த முடிவுக்கு வர வாய்ப்பு இருக்கும். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய நிலை அதிலே என்ன என்பதுபற்றி ஒரு அறிக்கை வெளியிடுவது நல்லது என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் குறிப்பிடுவதைப்போன்று இந்தப் பேரவையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் விவாதத்தில் கலந்துகொள்ளும்போது செய்தித்தாளிலே வந்த அந்தக் குறிப்பைப்பற்றி எடுத்துச் சொல்லி, அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு விளக்கத்தை தருவார்களானால் தெளிவு ஏற்படும்